எப்பொழுதும் பாவியுங்கள்
ராஜ பீடி ஸ்பெஷல்



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

Registered as a News paper in Ceylon விலை சதம் 10.

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 10 [1-5-68) இதழ் 80

யாழ்ப்பாணம் கீலக சித்திரை 19 ஸபர் 2 புதன்கிழமை

எப்பொழுதும் பாவியுங்கள்



ராஜ பீடி ஸ்பெஷல்
ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

### யாழ். நகரில் மேதின விழா

# அசம்பாவிதங்களை தடுக்க ராணுவத்தினர் உஷார்

## ஊர்வலம் வரும் வீதிகளில் பொலிஸ் ரோந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் மேதின ஊர்வலங்களிலும், கூட்டங்களிலும் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்கு இராணுவத்தினர் எந்நேரத்திலும் தயாராக இருப்பார்கள்.**

யாழ்ப்பாணத்தில் 50 இராணுவ வீரர்கள் எப்பகுதியிலும் அசம்பாவித சம்பவங்கள் நடந்தால் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து சென்று அமைதியை நிலைநாட்ட தயாராக இருப்பார்கள்.

மேதின ஊர்வலங்களுக்கு உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சி. தவராசா தலைமையில் இன்ஸ்பெக்டர் டயஸ், இன்ஸ்பெக்டர் இராமநாதன், இன்ஸ்பெக்டர் பெர்னாண்டோ ஆகியோர் பொறுப்பாக இருப்பார்.

இன்று காலை முதல் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய சந்திகளிலும், வீதிகளிலும் ஆயுதந்தாங்கிய பொலிசார் கடமையாற்றுவார்கள். ஊர்வலம் நடைபெறும் வீதிகளில் பொலிசார் ஜீப் வண்டிகளில் ரோந்து சுற்றுவார்கள்.

மேதின ஊர்வலங்களுக்குப் பொலிசார் அனுமதியும் பாதுகாப்பும் வழங்கியுள்ளனர்.

**கூட்டங்கள்**

கோட்டை முற்றவெளியில் தமிழ்க்காங்கிரஸ் ஆதிக்கத்தின் கீழுள்ள ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனமும், நரமண்டபத்தில் தமிழரசு ஆதிக்கத்தின் கீழுள்ள தொழிற்சங்கங்களும், 'ஸ்டேடியம்' மைதானத்தில் புரட்சிவாத கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்கங்களும், ஜின்ன மைதானத்தில் கூட்டாட்சிகளின் தொழிற்சங்கங்களும் கூட்டங்களை நடாத்தும்.

**ஊர்வலங்கள்**

புரட்சிவாத கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்களின ஊர்வலம் இன்று மாலை 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலிருந்து ஆரம்பமாகும். கூட்டாட்சி கட்சி தொழிற்சங்கங்களின் ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து ஆரம்பமாகும். தமிழ்க்காங்கிரஸ் தொழிற்சங்கசம்மேளனத்தின் ஊர்வலம் நாச்சிமார் கோவிலிலிருந்து ஆரம்பமாகும். தமிழரசுக்கட்சி தொழிற்சங்கங்கள் இம்முறை ஊர்வலம் நடத்துவதை கைவிட்டுள்ளது. [நல். நி.]

**தீவுப்பகுதியில் மேதினவிழா**

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இன்றுமாலை மேதின விழா நடைபெறும். அந்தோனியார் கல்லூரி முகப்பு பாதை வழியாக ஊர்வலம் ஆரம்பமாகும். கட்சி சார்பற்ற இவ்விழாவில் பல நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

---

### அடையாள அட்டை

## மசோதாவை எதிர்க்க காரணம் எதுவும் இல்லை

### எஸ். ஜே. வி. அறிக்கை

கொழும்பு, செவ்.

அடையாள அட்டை வழங்குவதற்கான மசோதாவில் தமிழர்களைப் பாதிக்கக்கூடிய அச்சங்களை நீக்குவதற்கு பிரதம மந்திரி ஒப்புக்கொண்டிருப்பதால் அம்மசோதாவை தமிழரசுக்கட்சி எதிர்க்கவேண்டியதில்லையென்று திரு. எஸ். ஜே. செல்வநாயகம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

திரு. வி. நவரத்தினம் இந்த மசோதாவிலுள்ள அபாய அம்சங்கள் பற்றி என்னிடம் எடுத்துக் கூறிய போது அவைகளை நான் ஒப்புக்கொண்டதாகக் கூறுவது உண்மையல்ல. நான் அப்படி ஒப்புக்கொள்ளவில்லை என்று திரு. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம மந்திரி மசோதாவிலுள்ள பாதகமான பகுதிகளை நீக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதே இந்த மசோதாவின் முக்கிய நோக்கம். கள்ளக் குடியேற்றத்தைத் தமிழரசுக்கட்சி எப்பொழுதுமே எதிர்த்து வந்துள்ளது. இந்த மசோதாவை எதிர்த்து வெளியேறுவதற்கு நியாயபூர்வமான எந்தக் காரணமும் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

### அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

தமிழ் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் மேதின விழாவை 1-5-68-ந் திகதி கொண்டாடுவார்கள். இத்தொழிற்சங்கங்களின் ஊர்வலம் நாச்சிமார் கோயிலடியிலிருந்து கே. கே. எஸ். வீதி வழியாக யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தை வந்தடைந்து பொதுக்கூட்டத்தை நடாத்தும். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இயூ. சி. எம். பி.யும் மற்றய பாராளுமன்றஉறுப்பினர்களும் ஏனைய தொழிற்சங்க தலைவர்களும் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

645

---

> ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி நடைபெற விருக்கும் மாணவ ஆசிரியப் பரீட்சையின் 'பொது அறிவும் உள்ளூர் அறிவும்' மாதிரி வினு விடைகள் நாளை வெளிவரும்.

---

## கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகஉபவேந்தர்கள்

கொழும்பு, செவ்.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தராக திரு. லெஸ்லின் ஏ. டி. சில்வா தெரிவு செய்யப்பட்டுள்ளார். தேசிய உயர் கல்விச் சபையில் அங்கம் வகிக்கும் திரு. லெஸ்லின் ஏ. டி. சில்வா முன்னர் கல்வி மா அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் சகோதரராவார்.

பேராதனை பல்கலைக்கழக உபவேந்தராக கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஜே. பெரேரா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த இரு பதவிகளுக்கும் பேராசிரியர் ஏ. டபிள்யு. மயில்வாகனம், தற்பொழுது மலேசியா பல்கலைக்கழகத்திலிருக்கும் பேராசிரியர் சி. ஜே. எலியேசர் ஆகியோர் உட்பட பலர் போட்டியிட்டனர்.

திரு. லெஸ்லின் ஏ. டி. சில்வா மே மாதத்தில் பதவி ஏற்பார். திரு. எம். ஜே. பெரேரா ஜூலை மாதத்தில் பதவி ஏற்பார். திரு. பெரேராவுக்குப் பதிலாக மந்திரிசபையின் காரியதரிசியாகவிருக்கும் திரு. தயாரத்ன நிரந்தரக்காரியதரிசியாகப் பதவி ஏற்பார்.

---

### வட பகுதியிலிருந்து

## 100 சிறுபான்மை தமிழ் பிள்ளைகள் தெரிவு

### தென்னிலங்கையில் சிங்கள மொழியில் கல்வி பெறுவர்

யாழ்ப்பாணம், புதன்

பௌத்த ஸ்தாபனத்தில் சிங்களத்தில் கல்வி பெறுவதற்காக நேற்று வட பகுதியிலிருந்து 100 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் இம்மாதம் 8-ம் திகதி கொழும்பிற்கு செல்வார்கள்.

யாழ்ப்பாணம் நாகவிகாரையில் நேற்று நடந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## சமூக ஏற்றத்தாழ்வை நீக்க பிக்குகள் கோஷ்டி முயற்சி

### தேநீர்கடை சொந்தக்காரருடன் சமாதான பேச்சுவார்த்தை

நல்லூர், செவ்வாய்

சங்கானை, கொடிகாமம் ஆகிய பகுதிகளில், சமூக ஏற்றத்தாழ்வை நீக்கும் பொருட்டு, இப்பகுதிகளிலுள்ள தேநீர்கடைச் சொந்தக்காரர்களுடனும், சிகை அலங்கரிப்பு நிலையச்சொந்தக்காரர்களுடனும் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்த பிக்குகள் கோஷ்டியொன்று முயற்சி எடுத்துள்ளது.

பம்பலப்பிட்டி விஜிதராம நாயகதேரோ தலைமையில் உள்ள இப்பிக்குகள் கோஷ்டியுடன், தென்னிலங்கையிலுள்ள பிரபல சிங்கள வர்த்தகர் ஒருவர் வந்திருக்கிறார்.

சங்கானையில் இம்மாதம் 5-ம் தேதி தேநீர்க்கடைப் பிரவேசத்தை அமைதியான முறையில் நடாத்த இப்பிக்குகள் கோஷ்டி தீர்மானித்திருப்பதாகவும்தெரியவருகிறது.

இதைத்தொடர்ந்து கொடிகாமப் பகுதியிலும், அமைதியான முறையில் தேநீர்க்கடைப் பிரவேசத்தைநடாத்த இக்கோஷ்டி ஒழுங்குசெய்யுமெனத் தெரியவருகிறது.

சங்கானைப்பகுதிமுழுவதும் ஆயுதம்தாங்கிய பொலிசார் அன்றையதினம், ரோந்து சுற்றுவார்களென்றும், மேலதிக பொலிசாரும், அப்பகுதியில் கடமையாற்றுவார்களென்றும் பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பொக்கம் பேசுவது பிறரை நிந்திப்பது, வசை கூறுவது, பொய் சொல்லுவது இவை நாக்குச் செய்யும் தீமைகள். கடவுள் பெயரையே சொல்லிக் கொண்டிருக்கப் பழகிவிட்டால், நாவின் இக்குறைகள் இரவே இரா. இதனால் மனம் அமைதியடைந்து அன்பும் இன்பமும் பெருகும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrm: EELANAD Jaffna
Post Box: 41 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் கீலகவருஷம் சித்திரைமாதம் 19ந்திகதி
(1-5-68)

## தொழிலாளர் விழா

இன்றுமே விழா. உலகத் தொழிலாளர் ஒற்றுமை நாள். இதை முன்னிட்டு தொழிலாளர் வர்க்கத்தினருக்கு நமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தொழிலாளர் தங்கள் உரிமைகளைப்பெற்று முன்னேற வேண்டுமாயின் அவர்களிடையே ஒற்றுமை மிகவும் அவசியம். துரதிருஷ்டவசமாக அந்த ஒற்றுமை நம் தொழிலாளரிடையே ஏற்பட முடியவில்லை. இந்த விழாவையே பல்வேறு போட்டிச் சங்கங்கள் பல பல இடங்களில் தனித்தனியே நடத்துவதே இதற்குச் சான்று.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்என்று இருந்தாலே தொழிலாளரிடையே ஒற்றுமை இருக்கும்; பல தொழிற்சங்கங்கள் இருப்பின் தொழிலாளர் பிளவுபட்டு, அவர்கள் பலவீனமடைவரென்று நாம் பன்முறையும் இப்பத்திகளில் வற்புறுத்தி வந்துள்ளோம். தொழிலாளரின் உண்மை நன்மையில் அக்கறை கொண்டவர்கள் இதை மறுக்கமுடியாது. என்றாலும் இதற்கான முறையில் தொழிற் சங்க சட்டத்தைத் திருத்த எவ்வித முயற்சியையும் யாரும் எடுக்கவில்லை. இது பெரிய துரதிருஷ்டமாகும்.

உதாரணமாக தோட்டத் தொழிலாளருக்காக இந்நாட்டிலே பலபோட்டாபோட்டி தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. சில மாதங்களுக்கு முன் விசேஷ படிச்செலவு பற்றி இரு முக்கிய தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்வதென தனித்தனியே தீர்மானித்தன. இதற்கிடையே ஒரு சங்கத்தார் பிரதமருடன் பேசி சமரச ஏற்பாடு செய்து கொண்டு வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். மற்றொரு சங்கத்தாரை பிரதமர் அழைத்துப்பேசவில்லை. அந்தசமரச ஏற்பாட்டை ஆட்சேபித்து அவர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து செய்து பின்னர் சில நாட்களில் அதைக்கைவிட வேண்டியதாயிற்று. இதனால் பல எளிய தொழிலாளர் குடும்பங்கள் சங்கடத்துக்கு உள்ளானதுடன், தொழிற்சங்கஇயக்கமே பலவீனப்படுவதாகின்றது.

ஸி. எம். யு. எனும் இலங்கை வர்த்தக ஸ்தாபன தொழிற் சங்க வேலை நிறுத்தத்தில் 22000 பேர் சுமார் ஒரு மாதகாலம் வேலை நிறுத்தம் செய்தார்கள். முடிவில் பிரதமர் தலையிட்டதன் மீது இவ் வேலைநிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது பற்றிய விவரங்கள் இன்னும் தெரியவில்லை. வேலை நிறுத்தம் முடிந்தது வரவேற்கத்தக்கதே. ஆனால் இதிலிருந்து சில முக்கிய கேள்விகள் எழுகின்றன. இந்த ஒருமாத வேலைநிறுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கும், பலபல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவு? பிரதமர் தலையிட்டுத்தான் வேலைநிறுத்தங்களை தீர்க்க வேண்டுமா! அப்படியாயின் ஏன் முதலிலேயே பிரதமர் தலையிடக்கூடாது? பிரதமரைத் தொந்தரவு செய்யாமலும் நாட்டுக்கும் இருதரப்பினருக்கும் கஷ்ட நஷ்டம் ஏற்படாமலும் தொழிற் தகராறுகளை சுமுகமாகப் பேசி தீர்த்துக் கொள்ள வேறு எவ்வித வழியையும் செய்ய முடியாதா?

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்டு நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு தொழிற் சங்கத்தை நடத்தி வருவதால் தொழிற் சங்க இயக்கத்திலும் அரசியல் பிளவுகள் புகுந்து தொழிலாளர் வர்க்கம் ஒற்றுமைப்பட முடியாமல் தடுக்கப் பட்டுள்ளது. இந்த அவல நிலையால் தொழிலாளருக்கு ஏற்படும் பாதகங்களை அரசியல் தலைவர்கள் உணர்ந்தே இருக்க வேண்டும். என்றாலும் ஏன் அவர்கள் இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுக்க மறுக்கின்றனர்? தொழிலாளரின் பொது நன்மையையும், நாட்டு நன்மையையும் விட, தங்கள் கட்சி நன்மையையே அவர்கள் முக்கியமாக்க் கருதுவது தானா? அல்லது வேறென்ன காரணம்? இந்த அவல நிலையை மாற்றினால்தான், இலங்கையிலுள்ள தொழிலாளர் வர்க்கம் ஒன்று படவும், தொழில் தகராறுகள் சமுகமாகத் தீர்ந்து தொழிலாளர் ஒற்றுமையாக வாழவும், நாடு அமைதியாக முன்னேறவும் முடியும். "ஒன்று பட்டாலே உண்டு வாழ்வு" என்ற பாரதியாரின் வாக்கை இந்த நன் நாளில் நினைவூட்ட விரும்புகிறோம்.

# 'இலங்கையர் எல்லோரையும் பாதிக்கும் பிரதமர் இதை வாபஸ்பெறவேண்டும்'

**[அடையாள அட்டை பெறும்படி வற்புறுத்தும் 'ஆள் பதிவு மசோதா' பற்றி நாடாளுமன்றத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் பேசியதன் தொடர்ச்சி இத்துடன் முடிவடைகிறது]**

அதற்குப் பின் வந்தது நாடாளுமன்ற தேர்தல் சட்ட திருத்த மசோதா. இதன் பலனாக தமிழ், முஸ்லிம் பெயர்களுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் வாக்காளர் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டார்கள். இந் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாய் இச்சபையில் இருந்த மூபேரும் நீக்கப் பட்டார்கள்.

திரு. ஆர். ஜி. சேனநாயகா: இந் நாட்டு மக்கள் பிரதிநிதிகளல்ல!

திரு. நவரத்தினம்: சந்தேகமில்லாமல், இந்நாட்டு மக்கள் பிரதிநிதிகள்.

திரு. ஆர். ஜி: பிரிட்டிஷ் பிரஜைகள், அச் சமயம் நாங்கள் பிரஜாவுரிமை சட்டம் இயற்றவில்லை.

திரு. நவரத்தினம்: பிரிட்டிஷார் அவர்களை இந் நாட்டு பிரஜைகள் ஆக்கினார்கள். அதுபோக அடுத்தாற்போல வந்தது நீதிமன்ற மொழி மசோதா. அப்பொழுது எதிர்க்கட்சி தலைவர் தமிழருக்கு நீதியான முறையில் நடந்திருப்பார். ஆனால் வேறு சிலர் அவருக்கு புத்தி புகட்டி அவரைத் தடுத்து விட்டார்கள். இம் மசோதாவின் பிரகாரம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னார் முதலிய இடங்களில் தமிழே நீதிமன்ற மொழியாயிருக்க வேண்டுமென்று மந்திரி உத்தரவிடமுடியாது.

திரு. கெனமன்: மாவட்ட சபை மசோதா இந்த வர்ணனையில் எங்கே வருகிறது?

திரு. நவரத்தினம்: எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. இந்த மசோதாவைப்பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன். கள்ளக் குடியேற்றத்தை தடுப்பதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பு கொடுக்க தயாராயிருக்கிறோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதற்காக இந்நாட்டு மக்கள் எல்லோரையும் நீங்கள் துன்பத்துக்கும் துயரத்துக்கும் உள்ளாக்கப்படாது. தமிழ்ப் பகுதிகளில் வாழும் சிலருக்கு பக்கத்திலுள்ள பட்டினமே என்ன நிறம் என்றும் தெரியாது. ஊர்காவற்றுறையிலுள்ள ஒரு வாலிபனுக்கு யாழ்ப்பாணம் எங்கிருக்கிறதென்பதே தெரியாது. இப்பேர்ப்பட்டவர்கள் அரசாங்க வர்த்தமானியையோ பத்திரிகை விளம்பரத்தையோபார்த்துவிட்டு விண்ணப்பம்போட்டு தங்கள் செலவில் படம் எடுப்பார்கள் என்று எதிர் பார்க்கலாமா?

பிரதமர்: இல்லை.

திரு. நவரத்தினம்: அரசாங்கம் செலவுகளைப் பொறுத்துக்கொள்ளும் தான். ஆனால் முதலில் படம்பிடிக்க பணம் வேண்டுமே!

பிரதமர்: இல்லை.

திரு. நவரத்தினம்: மசோவின்படி விண்ணப்பதாரர் மூன்று புகைப்படப் பிரதிகளுடன் விண்ணப்பம் செய்து பின்னர் அந்தச் செலவை அரசாங்கத்திடம் அறவிடவேண்டும். ஆகவே விண்ணப்பதாரர் முதலில் புகைப்படங்களை சமர்ப்பிக்கவேண்டும்.

பிரதமர்: இல்லை.

உதவி சபாநாயகர்; பிரதமர் அதை மறுக்கிறார். ஆகையால் கௌரவ அங்கத்தவர் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

திரு. நவரத்தினம்: நான் அவருடைய மறுப்பை ஏற்கிறேன். ஆனால் பொதுமக்களில் நூற்றுக்கு நூறு பேரும் விளம்பரங்களைப் பார்த்து, படிவங்களில் இத்தனையாம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டுமென்று தெரிந்து, படிவங்களை எடுத்து, விண்ணப்பம் செய்து. அடையாளஅட்டை எடுத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா? இதனால் மக்களுக்கு மகா மோசமான கஷ்டங்கள் ஏற்படும்.

நாங்கள் ஒரு பொலீஸ் அரசாங்கத்தில் வாழ்கிறோம். அது தான் எனது

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

சித்திரை மீ 19 உ.
[1-5-68]
புதன்கிழமை

திதி- சதுர்த்தி.

நட்சத்திரம்- மிருகசீரிடம்.

ராகுகாலம்- 11-57—1-27

சுபநேரம்- 4-27—5-57

இன்று பிறந்தவர்களுக்கு— சிந்தனையைத் தூண்டிவிடும் ஆண்டு. ஆராய்ச்சியில் ஆர்வமும் அறிவுத்தாகமும் அதிகம் இருக்கும். மாணவர்களாயின் நல்ல முன்னேற்றமுண்டு. குடும்ப வாழ்க்கையில் சில புதிரான எண்ணங்கள் தலைதூக்கக்கூடும். வணிகத்துறையில் எதிர்பாராத நல்லதிருப்பங்கள் உண்டு. பொதுவாக நல்ல ஆண்டு.

மேஷம்- பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்.

ரிஷபம்- குடும்பக்கவலை குறுக்குவழித் தலையீடு.

மிதுனம்- வாக்கில் மேம்பாடு,வசதிகள் பெருகும்.

கடகம்- குடும்ப சுகக் குறைவு, பிரிவுத் துயர்.

சிம்மம்- வாகன சுகம், வாழ்விலும் நலம்.

கன்னி- புத்திர சுகம், புதிய பாதை.

துலாம்- எதிரி பகை, ஏகமதி.

விருச்சிகம்- களத்திர சுகம், கண்ணியம் சேரும்.

தனுசு- நம்பிக் கெடுதல், நஷ்டமடைதல்.

மகரம்- பிதாவழிச் சுகம், பெரியோர் மதிப்பு.

கும்பம்- தொழில்நலன் தொடர்புகள் பெருகும்.

மீனம்- பொருள் வரவு- புதினம் கேட்டல்.

— சோதிடக்கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

## 50 வீத உற்பத்தி உயர்ந்தது

தளவெட்டி, செவ்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் அண்மையில் உடைந்த "மில்" மீண்டும் இப்போது இயங்கத் தொடங்கியுள்ளது.

சீமெந்து உற்பத்தி செய்யும் இரு 'மில்'களில் ஒன்று அண்மையில் உடைந்து இயங்காமல் இருந்தது தெரிந்ததே.

இவ் உடைந்த மில்லை இயக்குவதற்கு இத் தொழிற்சாலைத் தொழிலாளர்களுடன் புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்களும் ஈடுபட்டிருந்தனர்.

மேற்படி "மில்" இயங்கத் தொடங்கியதால் சீமெந்தின் உற்பத்தி 50சத வீதம் உயர்ந்துள்ளது.

# ஐயாறன் எழுதுகிறது

முந்தாநாள் இரவு சுமார் 7 மணி இருக்கும். யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்தியிலே பெருங் கூட்டம். ஸ்டான்லிக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பலரும் பேராதனைக்கு ஊர்வலமாகச் செல்லும் ஸ்ரீ முருகனைத் தரிசிக்க ஆவலுடன் பயபக்தியுடன் வழிநெடுகக் காத்திருந்தனர். பல வீடுகளிலும் குத்துவிளக்கு, பூரண கும்பம் வைத்து, பட்டுச்சாத்தி, கற்பூர தீபாராதனை எடுத்தனர். தெருவைத் தோரணங்கள் அலங்கரித்தன.

மாநகரசபை லொறி தெருவில் தண்ணீர் தெளித்துக்கொண்டு போயிற்று. இரண்டு நாட்களாக வருணனும் நகரை நன்றாகச் சுத்தமாக்கிவிட்டான். பல்கலைக் கழக இந்து மாணவரின் இப்புனித முயற்சியைப் பற்றிப் பெருமையுடன் பலரும் பாராட்டினர்.

முன்னதாக ஒலிபெருக்கி மூலம் சுவாமி வருவதை மக்களுக்கு அறிவித்து, தெருவை ஒழுங்குசெய்து கொண்டுபோயினர், ஒரு கோஷ்டியினர். பின்னர் கோவில் மகர தோரணங்களையும், மரியாதைகளையும் மாணவர் தாங்கிச் சென்றனர். அடுத்து வேத மந்திரங்களும், சமஸ்கிருத பஜனாவளி கோஷங்களும் ஒலிபெருக்கி மூலம் கணீரென்று ஒலித்தன. நியாய சிரோமணி ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியாரின் தலைமையிலே அந்தணச் சிறுவர்கள் வேதமோதிச் சென்றது ஓர் அபூர்வக் காட்சி.

புரக்டர் ஜோதி சுவாமிகளின் நாமாவளி பஜனை கேட்டோரைப் பக்தி பரவசமாக்கியது. முதலிலே பிள்ளையார், வள்ளி தேவசேனை சமேதராக முருகன் புஷ்பாலங்கார பூஜிதராக ஜம்ஜம்மென்று மேளதாளங்கள் முழங்க வந்து கொண்டிருந்தார். இதெல்லாம் கண்கொள்ளாக் காட்சிகள். சரித்திரத்தில் பதியத்தக்கன. பல்கலைக் கழக இந்து மாணவர்களை இது குறித்து எவ்வளவு போற்றினாலும் தகும். நம் இளம் சிங்கங்கள் மனம்வைத்தால் எதுதான் சாதிக்கமுடியாது.

ஃ ஃ

சாதாரணமாகப் பல்கலைக் கழகமென்றால் 'மாணவர் கலாட்டாக் கழகம்' என்று தான் நினைக்கும்படி பக்கத்திலுள்ள தமிழகத்து நிலைமையுள்ளது அத்துடன் ஒப்பிடுகையில் நமது பேராதனைப் பல்கலைக்கழகம் பற்றி நாம் எவ்வளவோ பெருமைப்படலாம்

அக்காலத்தில் மன்னர்கள் தான் கோவில் கட்டுவர். இங்கு மாணவ மாணவிகளின் முயற்சியால், பேராதனையிலே உன்னதமான குன்றத்தின்மீது ஒரு அழகான கோவில் எழுந்துள்ளது இது மாணவ உலகத்துக்கே ஒரு முன்மாதிரியாகும்.

பேராதனை சிங்களவருக்குத்தான் சேரும் என்றும், அங்கு முருகன் கோவில் கட்டவேண்டாமென்றும் சில "நண்பர்கள்" யோசனை கூறித் தடுக்க முயன்றனராம். முதலில் ஒரு தாய் கொடுத்திருந்த பணத்தை ஏப்பமிடவே, கோவில் கட்டுவதாகச் சிலர் முன்வந்துள்ளதாகப் புரளி கிளப்பப்பட்டதாம். அந்தப் பணத்தையே தொடா[illegible] இந்து மாணவர்களும், [illegible]ரியர்களும் சேர்ந்[illegible]

(6-ம் பக்கம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கம்யூனிஸ்ட் உச்சி மாநாடு மாஸ்கோவில் நவம்பர் 26-ல் நடைபெறும்

## புடாபெஸ்ட் மாநாட்டில் அறிவிப்பு

புடாபெஸ்ட், ஏப் 30

புடாபெஸ்டில் கூடியுள்ள உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் மாநாடு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச உலகக் கம்யூனிஸ்ட் நாடுகள் உச்சிமாநாடு மாஸ்கோவில் நவம்பர் 26ந் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

1960ம் ஆண்டில் நடைபெற்ற மாஸ்கோ உச்சி மாநாட்டுக்குப்பிறகு, அடுத்த நவம்பரில்தான் முதற்தடவையாக மற்றுமொரு உச்சிமாநாடு நடக்கவிருக்கிறது.

நவம்பரில் மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் உச்சி மாநாட்டில் மொத்தம் 64 கம்யூனிஸ்ட் நாடுகள் பங்குபற்றலாம் என இந்த அறிக்கையில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது.

புடாபெஸ்ட் மாநாட்டில் கலந்து கொள்ளாத15கம்யூனிஸ்ட் நாடுகள், எதிர்வரும் மாஸ்கோ உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவதாகத் தமக்குத் தெரிவித்துள்ளதாக மாநாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## மாஸ்கோவில் டிட்டோ

மாஸ்கோ, ஏப். 30

நேற்று மாஸ்கோ வந்து சேர்ந்த யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல்டிட்டோ ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்து, இரு நாடுகள் சம்பந்தப்பட்ட தொடர்புகள் பற்றியும், சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சிகளிடையேயான கொள்கை வித்தியாசங்கள், பிரச்னைகள் பற்றியும் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

அடுத்த நவம்பரில் மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் உலகக் கம்யூனிஸ்ட் நாடுகள் மாநாட்டில் யூகோஸ்லாவியா கலந்து கொள்வது பற்றியும் டிட்டோ, ரஷ்யத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையில், யூகோஸ்லாவிய பத்திரிகையொன்று அந்நாடு மாஸ்கோ உச்சிமாநாட்டில் பங்குபற்றுதுஎன்று



நிச்சயமாகத் தெரிவித்துள்ளது.

ஆனால் இதுபற்றிய இறுதி முடிவைத் தாயகம் திரும்பிய பிறகே டிட்டோஎடுப்பாரெனப் பொதுவாக நம்பப்படுகிறது.

## 1000 ஆண்டுகள் வயதுடைய இராட்சச மரம்

மாஸ்கோ, ஏப்ரல் 30

உக்ரேனின் சோர்காஸி பிரதேசத்தில் உள்ள மிகப் பழமையான மரமொன்று அடர்ந்தபகுதியில் மீண்டும் மரங்களில் துளிர்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. இளம் மரங்களில் மட்டுமன்றி 12 மீட்டர்கள் சுற்றளவுள்ள இராட்சச 'ஓக்' மரத்திலும் இலைகள் தோன்றப்போகின்றன.

வன இலாகா நிபுணர்கள், இந்த இராட்சச மரத்தில் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் தான் முதல் துளிர் தோன்றியிருக்கவேண்டுமென்று மதித்துள்ளனர். இம் மரத்திற்குச் சுற்றுப்புறதில் வாழும் தொழிலாளர்கள் இம்மரத்தினைக் கவனமாகப் பாதுகாத்துவருகின்றனர். இம்மரத்திற்கு அருகில் தங்கள் சக கிராமவாசிகள் நாஸிகளால் சாகடிக்கப்பட்ட அந்த இடத்தில், அக்கிராமவாசிகள் அழகான நினைவுச் சின்னம் ஒன்றினையும் அமைத்துள்ளனர்.

## மாஸ்கோவில் மேதின அணிவகுப்பு

மாஸ்கோ, ஏப்ரல் 30

சர்வதேச உழைக்கும் மக்களின் ஒருமைப்பாட்டுத் தினமாகிய மே முதலாந் திகதி காலை 10 மணியளவில்மாஸ்கோவில் இராணுவ அணிவகுப்பு ஒன்று நடைபெறும்.

இவ்வணிவகுப்பினைசோவியத் பாதுகாப்பமைச்சர் மார்ஷல் ஆந்திரிகிறெச்கோ பார்வையிடுவார். மாஸ்கோ இராணுவ வட்டாரத்தின் முதல் துணைத் தளபதியான கேர்னல்—ஜெனரல் இவ்ஜெனி இவனேவ்ச்கி அணிவகுப்பினுக்கு தலைமை தாங்கும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

அணிவகுப்பின்பின் செஞ்சதுக்கத்தின் ஊடாக ஊர்வல வரிசைகள் செல்லும்.

ஐரோப்பாவின்

## முதலாவது இருதய மாற்று சிகிச்சை

### பிரெஞ்சு டாக்டர்கள் அரிய சாதனை

பாரிஸ், ஏப்ரல் 30

பிரான்ஸில், ஐரோப்பாவின் முதலாவது இருதய மாற்றுச் சிகிச்சை நடைபெற்றுள்ளது.

பாரிஸ் ஆஸ்பத்திரி ஒன்றில் மூன்று பிரெஞ்சு டாக்டர்கள், 22 வயது இளைஞன் ஒருவனின் இருதயத்தை, 66 வயதான வயோதிபருக்கு வெற்றிகரமாக மாற்றிப் பொருத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிவினை 'பியாவ்ரா'வுடன் சமாதானப்பேச்சுவார்த்தைகள் தயார் என்கிறார் சமஷ்டித்தலைவர் கவாண்

லாகோஸ், ஏப்ரல் 30

சமஷ்டி நைஜீரியத் தலைவர் மேஜர் ஜெனரல் கவாண், பிரிவினை 'பியாவ்ரா'வுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி தமக்கு நம்பிக்கையிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், கடந்த 10 மாதகாலமாக நடந்துவரும் உள்நாட்டுப் போரை, நிறுத்துவதற்கு முதலில் 'பியாவ்ரா' தனது பிரிவினைக் கொள்கையைக் கைவிடுவதற்கான அறிகுறியை நடைமுறையில் காட்டவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

எவ்வளவு விரைவோ, அவ்வளவு விரைவில் இருசாராரும் கூடிப் பேசவேண்டியதுதான் தற்போதுள்ள முக்கியமான விஷயமாகும் என்று மேஜர் ஜெனரல் கவாண் குறிப்பிட்டார்.

செனகலின் தலைநகரான டாக்காவில், நிபந்தனைகள் எதுவுமற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தலாமென்ற 'பியாவ்ரா'வின் ஆலோசனை பற்றி கவாணிடம் கேட்கப்பட்டபோது, செனகலில் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றித் தாம் மறுப்புத் தெரிவிக்கவில்லை என்றும், ஆனாலும், அதே நேரத்தில் டாக்கார் தான் பேச்சுவார்த்தைகளுக்கு உகந்த ஒரே இடம் என்று தாம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் அவர் கூறினார்.

1952-ல்

## செக்கோஸ்லாவாக்கியாவில் நடந்த அரசியல் விசாரணைகள்

### ரஷ்யத்தலைவர் மிக்கோயனே காரணஸ்தர் எனக்குற்றச்சாட்டு

பிராக், ஏப். 30

முன்னாள் செக்கோஸ்லவாக்கிய பாதுகாப்பு மந்திரி ஒருவர், தமது நாட்டில் 1952-ல் நடைபெற்ற அரசியல் விசாரணைகளுக்கு உத்தரவிடுவதற்குக் காரணமாக இருந்தவர் ரஷ்ய மந்திரி திரு. அனஸ்டாஸ் மிக்கோயனே என இங்கு குற்றஞ் சாட்டியுள்ளார் இந்த அரசியல் விசாரணைகளின் போது, முன்னாள் செக். உதவிப் பிரதமர் திரு. ருடோல்வ் ஸ்லான்ஸ்கி, சதிக்குற்றச்சாட்டில், மரண தண்டனை நிறைவேற்றப்பட்டார்.

இந்தக் குற்றச் சாட்டை திரு. கரோல் பஸிலெக் வெளியிட்டுள்ளார்

1952-ல் செக்கோஸ்லாவாக்கியாவில் பல குற்றமற்ற உயிர்களைப் பலியெடுத்த களைபிடுங்கல் நடவடிக்கைகளில் நேரடியான தொடர்பு கொண்டுள்ளவர் என, உயிருடன் வாழும் சோவியத் பிரமுகர் ஒருவர் பெயர் சுட்டப்பட்டுள்ளது இதுவே முதற் தடவையாகும் எனப் பார்வையாளர்கள் கருதினர். இப்போது அதிகம் செய்தியில் அடிபடாத முன்னாள் ரஷ்ய உதவிப் பிரதமரான திரு. மிக்கோயன் தான், ஸ்லான்ஸ்கியைக் கைது செய்யுமாறு அப் போதைய செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி கிளெமண்ட்கொட்வால்டை நெருக்கியதாகத் திரு. பஸிலெக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

செக்கோஸ்லாவாக்கிய இளைஞர் சஞ்சிகையொன்றில் அளித்துள்ள பேட்டியிலேயே, திரு. பஸிலெக் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

லண்டனில்

## உலோக தொழில் காங்கிரஸ்

லண்டன், ஏப். 30

லண்டனில் மே 5-ம் திகதி தொடக்கம் 24-ந் திகதி வரை, ஒன்பதாவது சாம்ராஜ்ய அரங்க உலோகத் தொழில் காங்கிரஸ் நடைபெறவிருக்கிறது. இதற்கான பதிவுப் படிவங்களை பிரிட்டனின் சுரங்க, உலோகத் தொழில்நிலையம் அனுப்ப ஆரம்பித்திருக்கிறது.

இந் நிலையத்தாலும் இரும்பு, எஃகு, பெற்ரோலியம் ஆகியன சம்பந்தமாக ஆறு கைத்தொழில் நிலையங்களாலும் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்ட இக் காங்கிரஸ், நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

இதற்கு சமுகமளிப்பதற்கான அழைப்பிதழ்கள் சாம்ராஜ்யசபையின் அங்கத்துவசபைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன ஆர்வமுள்ள சாம்ராஜ்ய நாட்டு அங்கத்தவர்களும் அழைக்கப்படுகின்றனர்.

மேலும் தகவல்களைப் பெறவிரும்புவோர் திரு. பி. டபிள்யூ. கேதன் கௌரவ செயலாளர், ஒன்பதாவது சாம்ராஜ்ய சுரங்க உலோகத்தொழில்நிலைமை என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

உடுவில், செவ்வாய்

அரியாலைஸ்ரீ கலைமகள்சன சமூகநிலையத்தின்வருடாந்த பொதுக்கூட்டம் திரு. செ. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. கதிர்காமு, உபதலைவர் திரு. வே. நாகராசா, இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் எம். ஜி. இல்லைநாயகம் கே. பொன்ராசா. பொருளாளர் திரு. த. சிவபாக்கியம் நிர்வாகசபை யொன்றும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

## 'எமது நாட்டைத் தோற்கடிக்கமுடியாது'

### இஸ்ரேல் தொழில் மந்திரி கூறுகிறார்

லண்டன், ஏப் 30

தமது நாடு தோற்கடிக்கப்பட மாட்டாது என இங்கு தெரிவித்த இஸ்ரேலிய தொழில் மந்திரி திரு. அலொன், அதே நேரத்தில் அரபு நாடுகளுடனான சமாதான மாநாடொன்றுக்கு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலின் 20-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுமுகமாக லண்டனில் நடைபெற்ற ஓர் இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு பேசுகையில், "அரபு நாடுகள் மும்முறை எம்மைப் போர்க்களத்தில் பரீட்சித்து விட்டனர். ஒரு தடவையாவது எம்மை அவர்கள் மாநாட்டு மேசையில் வைத்துச் சோதிக்க வேண்டுமென்பதே எமது விருப்பம்'' என்று திரு. அலொன் கூறினார்.

#### இருபக்க ஒத்துழைப்பு

"எம்மைப் பொறுத்தவரை, கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற 6 நாட்போரே இஸ்ரேல் பங்குபற்றிய கடைசிப் போராக இருப்பதையே நாம் விரும்புகிறோம். ஆனால், சமாதானத்துக்கும் இரு பக்க ஒத்துழைப்பு அவசியம்'' என்றார் திரு. அலொன்.

"அண்மையில், இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது என்பது சரணடைதலுக்குச் சமனாகும் என்று ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸர் அறிவித்திருந்தார். இது உண்மையிலேயே ஒரு குழப்பமான கூற்றாகும். ஏனெனில், இஸ்ரேலின் வாழும் உரிமையை மறுக்கும் போர் நிலைக்கே இது திரும்பவும் கொண்டு செல்கிறது.

#### வருந்தத்தக்கது

இது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். நேரடிப் பேச்சுவார்த்தைகள், ஐ. அ. கு. சரி மற்ற எந்த அரபு நாடும், கௌரவத்துடனான சமாதானத்தைப் பெறவும், பாதுகாப்புடனான சமாதானத்தை இஸ்ரேல் பெறவும் வழிவகுக்கும்.

நாஸர் அப்படிக் கூறியது அவரது, கடைசி வார்த்தை இல்லை என நம்புகிறோம். இல்லையெனில், இது -துக்கியமாக, அவரது சொந்த மக்களுக்கு வருந்தத்தக்க செய்தியாகும்.

#### சமாதான உடன்படிக்கை

பயனுள்ள பரஸ்பர பந்தோபஸ்துக்கு உறுதியளிக்கும் முழுமையான ஒரு சமாதான உடன்படிக்கைக்குக் குறைந்த எவ்வித தீர்வையும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளாது.''

இவ்வாறு இஸ்ரேல் தொழில் மந்திரி தமது பேச்சில் வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளுப்பிட்டி கொலை வழக்கு

### எதிரி விடுதலை

கொழும்பு, செவ்.

''எதிரி ஓடிச்சென்று ஒரு தடியால் இறந்தவரின் பிடரியில் ஓங்கி அடித்தார். உடனே இறந்தவர் மயங்கி நிலத்தில் விழுந்தார். பாத்திரங்கள் கழுவிக்கொண்டு நின்ற நான் பாத்திரங்களை வீட்டுக்குள் வைத்துவிட்டு திரும்பவந்தபோது இறந்தவரைச் சுற்றிச் சனக்கூட்டம் நின்றது. கீழே கிடந்த ஒரு கத்தியைப் பொலிசாரிடம் ஒப்படைத்தேன்.''

கொள்ளுப்பிட்டி கொலை வழக்கில் சுமணாவதி என்னும் பெண் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு கொழும்பு அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. ஏ.சி.ஏ. அலஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் அட்வகேட் திரு. குலதுங்கா ஆஜரானார். எதிரி தரப்பில் அட்வகேட் திரு. பொ. சிவலோகநாதன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் தேதி கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த செல்லையா வேலு என்பவர், அதே இடத்தைச்சேர்ந்த எல். எச். சோமபாலா என்பவரைத் தடியால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (வி.நி.)

---

## மூன்று தற்கொலைகள்

யாழ்ப்பாணம், செவ்.

நேற்றுமுன்தினம் 3 தற்கொலைகள் புத்தூர் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் ஆனந்தவடலி ரோட் முதலிய இடங்களில் நடைபெற்றுள்ளன.

புத்தூர் கிழக்கைச்சேர்ந்த வெள்ளையன் சித்தன் என்பவரைத் தேடிப் பல கடன்காரர் வந்ததாகவும் வெங்காயம் விற்றகாசை வாங்கி ஏன் கடன்காரரிடம் கொடுக்கவில்லை என்று அவரது மனைவி ஏசியதாகவும் அதைத்தொடர்ந்து அவர் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனந்தவடலி ரோட்டைச் சேர்ந்த நாகமுத்து சின்னப்பு [வயது 62] காசநோயால் பீடிக்கப்பட்டதால் சவரம் எடுக்கும் கத்தியால் கழுத்தை வெட்டித் தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை ஜெகநாதன் [வயது 16] பீடி குடிக்கும் வழக்கமுடையவரெனவும், அதற்காகசம்பவதினம் அவரது தாயார் அவரை ஏசியதாகவும், தந்தையார் அடித்ததாகவும் அதைத் தொடர்ந்து அன்றிரவு அவரைக் காணாது தேடவே மேல்மாடியில் சுருக்கிட்டுத் தொங்கிக் கொண்டிருக்கக் காணப்பட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. டாக்டர் சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை நடத்தினார்.

மூன்று மரணங்களையும் விசாரித்த திடீர்மரண விசாரண அதிகாரி திரு. கனகரத்தினம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். [கா.நி.]

---

## ரதோற்சவம்

உடுவில், செவ்.

சித்தங்கேணி துறட்டிப்பனை முத்துமாரி அம்மன் கோவில் தேர்த்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெற விருக்கின்றது. அன்று காலை அம்பாளுக்கு விசேஷ பூஜையும் அபிஷேக ஆராதனைகளும் பகல்... பான் ரதத்தில் பவனிவரு காட்சியும் நடைபெறும்

## மனைவி பணம் தரவில்லையாம்

### கணவன் தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

கடன் காசைத் திருப்பிக் கொடுக்க மனைவியிடம் பணம் கேட்டவர் மனைவி கொடுக்க மறுத்ததால் தற்கொலை செய்துகொண்டாராம். கோப்பாயில் நடைபெற்ற இம்மரணம் சம்பந்தமாக உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு. அல்பிரட் துரையப்பா மரண விசாரணை நடத்தினார்.

மரணமான விஜயரத்தினம் என்றவர் இ. போ. ச. வில் கடமையாற்றுபவர் என்றும், அவருக்கு நிரம்பக் கடன் இருந்ததால், கடனைக் கொடுக்க மனைவியிடம் பணம் கேட்டபோது மனைவி கொடுக்க மறுத்ததால் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானதாகவும் மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை என திரு. அல்பிரட் துரையப்பா தீர்ப்பு வழங்கினார். [கா.நி]

---

## அரசாங்க மரக்காலை இடமாறும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சுங்க இலாகாவிற்கு முன்னாலுள்ள அரசாங்க மர விற்பனவு நிலையம் இங்கிருந்து நாவற்குழிக்கு இடமாற்றம் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகப் பெரியதாக இருக்கும் முக்கியமான மர விற்பனை நிலையமான இது இங்கிருந்து மாற்றம் செய்யப்படவிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது. அத்துடன் இந்த மரக்காலையை இங்கிருந்து மாற்றம்செய்ய சுமார் 10,000 ரூபாய் செலவாகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை இங்கிருந்து மாற்ற வேண்டாமெனவும், மாற்றினால் யாழ்ப்பாணத்திலிருப்பதுபோலச் சௌகரியமாக இருக்காதெனவும், பொதுஸ்தாபனங்களும், மற்றும் பலரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (காநி.)

---

## புகைப்படம் பிடித்தனர்

நெடுந்தீவு, செவ்

இலங்கையில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் அடையாள அட்டைக்கு வேண்டிய புகைப் படங்களைப் பெறுவதற்காக நெடுந்தீவில் 150 மீனவர்கள்வரை நெடுந்தீவுக் காரியாதிகாரிகந்தோரில் புகைப்படம் பிடிக்கப்பட்டார்கள். பிடிக்கப்பட்ட படங்கள் ஒரு வாரத்திற்குள் இவர்களுக்கு வழங்கப்படுமாம். இப்படங்கள் கிடைத்ததும் காலதாமதமின்றி இவர்களுக்குக் கடலில் மீன்பிடிக்கச் செல்லுவதற்கு வேண்டிய பர்மிட் அடையாள அட்டை யாழ்ப்பாணக் கச்சேரியில் வழங்கப்படுமாம்.


படப்பிடிப்பு வேலையைக் கொழும்பிலுள்ள ஒரு ஸ்ருடியோ ஸ்தாபனத்தார் ஏற்றுள்ளார்கள். இவர்கள் மீனவர்கள் உள்ள இடங்களுக்குச் சென்று படப்பிடிப்பு வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வொரு மீனவரும் தலா ரூபா 3-50 தங்கள் படங்களுக்குச் செலுத்த வேண்டுமாம்.

## நியமனப் பத்திரம் தாக்கல்

உடுவில், செவ்.

மானிப்பாய் கிராமசபையின் 14-ம் வட்டாரத்திற்குரிய அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் அண்மையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. திரு. என். கந்தசாமி, திரு. எஸ். கிருஷ்ணன், திரு. எம். சின்னத்தம்பி ஆகிய மூவரும் மேற்படி வட்டாரத்துக்கான இடைத்தேர்தலுக்கு தமது நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர்.

மானிப்பாய் கிராமசபையின் 14-ம் வட்டார அங்கத்தவர் திடீரென காலமாகிவிட்டதைத் தொடர்ந்தே இவ்விடைத்தேர்தல் நடைபெற இருக்கின்றது.


ரசாயனப்பொருளை பிளையுங்கள் ஷெல்லை பிளையுங்கள்

அல்றெக்ஸ், டீல்றெக்ஸ் 20, டீல்றெக்ஸ் எக்ஸ்ட்ரா. ஆக்ஸோஸன், போஸ்றின். என்றெக்ஸ் 20, மலதியன், கமிந்தியன், ஷெல் களைப்புத்கொல்லி எம் 50, ஷெல் களைப்புத் கொல்லி ஆர். ... ஷெல் டி. எச். ஸி. 10% தூள் — இவை ஷெல் ... விவசாய ரசாயனப் பொருட்களில் சில ...

எப்பயிர்க்கும் உயிவுண்டாம் உயிவில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

# றோயல் டிஸ்பென்ஸரி

PHON 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

EN 3724, B.S.A. 250 CC மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும். A.K இராசதுரை, நெசவு ஆசிரியர், புத்தூர்ச்சந்தி, கொடிகாமம். 1458

### காணவில்லை

வேலைப்பதிவு கந்தோர் அட்டை, பாடசாலை எஸ். எஸ். சி சேட்டிபிகற், நற்சாட்சிப்பத்திரம், பிறப்பு சேட்டிபிகட் ஆகியன புதிய பஸ் ராண்டில் தவறிவிட்டன. இதை கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T. குலோத்துங்கம், நம்பர் 3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி, நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 1459


## புதிய நியமனம்

கொழும்பு, செவ்.

திரு. எஸ. நவரத்தினராசா வர்த்தகப் பகுதியின் புதிய டைரக்டராக மேமாதத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.


**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Stanley Baker
in
**ZULU**
[Cinemas cope]

**REGAL** JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P.M.
Marlon Brando, Sophia Loren
in
A Countess From Hong Kong


அரசாங்க ஊழியர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

# 103 ஓட்டங்களால் இ. போ. ச. வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் கச்சேரி ஊழியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டியில் இலங்கைப் போக்குவரத்துச்சபைக் கோஷ்டி 103 ஓட்டங்களால் கச்சேரிக் கோஷ்டியை வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைப் போக்குவரத்துச்சபைக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தம்பிராசா என்னும் துடுப்படி வீரர் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

கச்சேரிக் கோஷ்டி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துடுப்படி வீரர் இம்மனுவல் 15 ஓட்டங்களைப் பெற்றார். 2-ம் இன்னிங்ஸில் இலங்கைப் போக்குவரத்துச்சபைக் கோஷ்டி 8 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. இக்கட்டத்தில் கச்சேரிக்கோஷ்டியின் சிறந்த பந்தெறி வீரரான இம்மனுவல் பலவிக்கட்டுகளை குறைந்தஓட்டங்கள் நஷ்டத்துக்கு வீழ்த்தினார். கச்சேரிக் கோஷ்டி தனது இரண்டாம் இன்னிங்ஸ் ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. (வி. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 1-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-30 தொழிலாளர்வேளை, 9-30 படப் பாட்டுக்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்பஇசை.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-45 பா வளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு—'மேதினம்'— ஆர். நமசிவாயம், 9-45 பாட்டு — எஸ். தில்லைநாயகம்போல்.

## சுற்றுப் போட்டியில் பரிசு பெற்றோர்

ஊரிகாவற்றுறை, செவ்.

மகாமாரி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கரபந்தாட்ட கிளித்தட்டுப் போட்டிகளில் வெற்றிக் கேடயங்களைப் பெற்றுக் கொண்ட கழகங்களின் விபரம் வருமாறு:—

கரபந்தாட்டம்.— தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையம். றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம். கிளித்தட்டு:- வேலணை கலைமகள் சனசமூக நிலையம், கரபந்தாட்டத்தில் சாம்பியனாகிய காந்திஜி சனசமூக நிலையக் கோஷ்டியினர் தீவுப் பகுதி எம். பி. யிடம் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர். பரிசளிப்பு விழாவின் பின்பு தீவுப்பகுதி தெரிவுக் கோஷ்டியினரும், வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகத்தினரும் கலந்து கொண்ட கரபந்தாட்டப் போட்டி செற்றப்பிங் முறையில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆரம்பத்திக் தீவுப் பகுதி தெரிவுக் கோஷ்டியினர் திறமையாக விளையாடிய போதும் வல்வைக் கோஷ்டியிடம் தோவிக் அடைந்தனர்.

## 'திடகாத்திரமாக வாழ வழி'

கரவெட்டி, செவ்வாய்

'திடகாத்திரமுள்ளவர்களாக வாழ்வதற்கு விளையாட்டு அவசியம். நாம் சோம்பேறிகளாக இருப்பதை விட்டு எந்நேரமும் சுறுசுறுப்பாக இருக்கவேண்டும்''

கரவெட்டி மேற்கு மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப்போட்டி முங்கோடை முருகமூர்த்திகோவில் முன்றலில் நடைபெற்ற பொழுது மேற்படி நிலையத் தலைவர் ஆசிரியர் வா. ஆழ்வாப்பிள்ளை பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விளையாட்டுப் போட்டி முடிவுகள் வருமாறு:

மத்தியபிரிவு 100 யார் ஓட்டம்: ஐ. இராமச்சந்திரன், வி. நாகேந்திரம் ஆ. கிருஷ்ணபிள்ளை.

மேற்பிரிவு 440யார் ஓட்டம்: ஆ. சீனிவாசகம்; வ. மகாதேவன், ஆ. கந்தசாமி

கீழ்ப்பிரிவு பெண்கள் 100 யார் ஓட்டம்: சி. செல்வராணி, க. புவனேஸ்வரி, வீ. தர்மவதி.

ஒருமைல் ஓட்டம்: ம. சிவம், வீ. சிவசோதி, ஆ. சிற்றம்பலம்.

குண்டெறிதல்: ஆ. சீனிவாசன், கி. கந்தசாமி.

உயரம்பாய்தல்: செயராசா, இரமச்சந்திரன், சி. பொன்னையா.

வாலிபருக்கும் குடும்பஸ்தருக்குமிடையே நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் வாலிபர்கள் வெற்றியீட்டினர்.

விளையாட்டுப்போட்டியை ஆசிரியர் க. இராசரத்தினம் ஆரம்பித்து வைத்தார் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் பரிசில்கள் வழங்கப்படும். நிலைய காரியதரிசி ஆ. வன்னியசிங்கம் நன்றி கூறினார்.

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் கிழக்கில் பாலர் விடுதி ஒன்றை நிறுவித் தருமாறு கோண்டாவில் கிழக்குச் சனசமூகநிலையமும் கிராமமுன்னேற்றச் சங்கமும் கூட்டாகச் சேர்ந்து சமூக சேவைப் பகுதியினரைக் கோரியுள்ளது. [வி. நி]

## 'கும்பிடக் கூச்சப்படுகிறார்கள்'

உடுவில், செவ்

ஆண்டவனை குரல்வைத்து அழைத்துக் கும்பிட இன்றைய இளைஞர்கள் கூச்சப்படுகிறார்கள். இறைவனை அழைக்க கூச்சப்படுவதனால்தான் தமிழரும் சிறப்பாக இந்துக்களும் இன்று கூச்சப்படக்கூடிய ஒரு நிலையில் இருக்கின்றார்கள். வாய் நிறைய முருகா என்றழைத்தால் வாழ வழி செய்வான் குமரன். சேட்டு காலணி, தலைப் பாகை போன்றவற்றை அணிந்து கொண்டு செல்பவர்கள் அவற்றை கோவிலுக்கு வெளியே வைத்துவிட்டு போவதால் மட்டும் முருகன் அருள் கிட்டாது''

சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலில் 'முருகன் பெருமைகள்' என்னும் விஷயம் பற்றி சமய சொல்பொழிவுகள் நிகழ்த்திய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் இவ்வாறு கூறினார்.

## சமயதீட்சை

யாழ்ப்பாணம், புதன்

மனிதப்பிறவி யெடுத்த நாம் வசதியாக வாழும் பொழுதே அருளாசிரியர் கள்வகுத்தநெறிமுறையைக் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ தத் புருஷ தேசிகர் நெடுந்தீவு சைவ இளைஞர் சங்க ஆதரவில் மேற்கூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். இக் கோவிலில் சிலர் விசேட தீட்சையும் நாற்பத்திரண்டுபேர்சமயப்பிரவேச தீட்சையும் பெற்றனர்.

## புதிய நிர்வாகிகள்

உடுவில், செவ்வாய்

நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தின் வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மேற்படி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு திரு. வே. சிற்றம்பலம் தலைமை வகித்தார்.


புதிய வருடத்திற்கானநிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. சிற்றம்பலம், உபதலைவர் திரு. எம். செல்வராசா, செயலாளர் திரு. வி. கமலநாதன், உபசெயலாளர் திரு. ஏ. சிவராசா, தனாதிகாரி திரு. எஸ். மகேந்திரன். நிலையப் பொறுப்பாளர்கள் திருவாளர்கள் எம். செல்வராசா, கே. அருள்சோதிரத்தினம்.

மேலும் ஏழுபேர் கொண்டநிர்வாக உறுப்பினர்களும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
மொடேர்ன் [பதுளை]
விஜிதா [மஸ்கேலியா]



சிவாஜி கணேசன் — சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

**சரஸ்வதி சபதம்**

இன்றுமுதல் ★ ராஜா யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 9-30; விடுமுறை நாட்களில் காலை 10-30.



கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவாகி
நடிகர்திலகம் சிவாஜிகணேசனின்
மிடுக்கான பேச்சினால்
உயர்வு பெறும் ஒப்பற்ற
திரைக்காவியம்.

பத்மஸ்ரீ
சிவாஜி கணேசன்
டி.ஆர்.ராஜகுமாரி, S.S.R;
கண்ணாம்பா
நடித்த

**மனோகரா**

வெளியீடு.

(புதியகொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட சபை

# நள்ளிரவுவரை மந்திரி சபை கூட்டத்தில் பரிசீலனை

கொழும்பு, செவ். மாவட்டசபை நகல்மசோதா குறித்து மந்திரிசபை அவசரமாகக் கூட்டி நேற்று நள்ளிரவு 2 மணி வரை பரிசீலித்தது. நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமான இக் கூட்டம் நேற்று நள்ளிரவு 2மணிக்கே முடிவடைந்தது. நகல் மசோதா பகுதி பகுதியாக மந்திரி சபைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. இம் மாத இறுதியில் பார்லிமென்டரிக்குழுவுக் கு முன்னுல் மாவட்ட சபை நகல் மசோதா சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

# படகுபாறைமீதுமோதி ஒருவர் பலியானுர்

## ஆழ்கடலில் சம்பவம்

முல்லைத்தீவு, செவ். ஆழ்கடலில் மீன்பிடிப் படகொன்று பாறையுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் கடலில் மூழ்கி மாண்டார். இன்னொருவர் பாறைமேல் வீசப்பட்டுத் தெய்வாதீனமாக உயிர் தப்பினுர்.

இப்பரிதாப சம்பவம் கொக்குத்தொடுவாய் செல்லும் பாதையிலுள்ள நாயாற்றில் சம்பவித்தது. நீர்கொழும்பைச் சேர்ந்த டபிள்யூ. றிச்சர்ட் பெர்னுண்டோ என்னும் மீன்பிடித் தொழிலாளியே கடலுக்குப் பலியானவராவார் என்று தெரிகின்றது. நாயாறும், கடலும் சந்திக்கும் முகத்துவாரத்தில் படகு திடீரென ஒரு பெரிய பாறையுடன் மோதி அதிர்ச்சிக்குள்ளானதில் பெர்னுண்டோ கடலுக்குள் தூக்கி வீசப்பட்டதாகவும், இன்னொருவர் தெய்வாதீனமாகப் பாறைமீதே வீசியெறியப்பட்டதால் உயிர் பிழைத்தார் என்றும் கூறப்பட்டது. கடலுக்குள் வீசப்பட்ட நபரைச் "சுழி" கடலுக்கடியில் கொண்டு சென்றுவிட்டதால் மீன்பிடித் தொழிலாளர்கள் அன்று முழுவதும் கடலில் தேடியும் சடலத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது. மறுதினமே சடலம் மீட்கப்பட்டது. காலஞ்சென்றவர் நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்களவரென்றும் அவருக்கு உறவினர் எவரும் இடையாதென்றும் கூறப்பட்டது.

மரணவிசாரணை நடாத்திய கரைதுறைப்பற்று தெற்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எப். ஏ. பெர்னுண்டோ விபத்தினுல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

[உடுப். நி.]

## 'இலங்கையர்..

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

குறை. மக்கள் பல விதமாகத் துன்புறுத்தப்படுவார்கள்.

ஓர் அங்கத்தவர்: காங்கேசன்துறைப் பிரதி நிதியும் யாழ்ப்பாணப் பிரதிநிதியும் இதை ஆதரிக்கிறுர்கள்.

திரு. நவரத்தினம்: இம்மசோதாவில் எத்தனை மாற்றங்கள் செய்தாலும் அதனுல் தமிழ் மக்களுக்கு திருப்தி ஏற்படப் போவதில்லை. முழு மசோதாவுமே மோசமானது. அதை வாபஸ் வாங்கும்படி நான் பிரதமரை வேண்டுகிறேன். இச் சபையில் என் குரல் ஒரு தனிக் குரலாக ஒலிக்கலாம். ஆனுல் பிரதமரின் நேர்மையிலும் அவர் தமிழருக்கு காட்டி வந்துள்ள நல்லெண்ணத்திலும் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்த தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின் உண்டான சமூக ஒற்றுமை இந்த மசோதாவினுல் பாதிக்கப்படக்கூடும். ஆகையால், இந்த மசோதாவை வாபஸ் வாங்குவதால் பிரதமர் தமிழ் மக்களுக்குபெருமளவு சேவை செய்தவராவார்.

[முற்றும்]

## இன்று

திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலைய முன்றலில் மேற்படி நிலையத்தின் திறந்த வெளி அரங்கிற்கான அத்திபாரக்கல்லை யாழ்ப்பாணம் கரியாதிகாரி திரு. ஏச். ஈ. புள்ளைநாயகம் நாட்டுவார்.

# ஆசைப்பிள்ளை கொலை: மனைவி செல்லம்மா விடுதலை

சாவகச்சேரி, செவ்.

ஆசைப்பிள்ளை கொலை வழக்கில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருந்த ஆசைப்பிள்ளையின் மனைவி செல்லம்மாவை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா விடுதலைசெய்து தீர்ப்பு வழங்கினுர்.

இவ்வழக்கில் 1967-ம் ஆண்டு டிசம்பர் 27-ம் திகதி உருத்திரபுரம் 10-ம் வாய்க்காலில் வசித்தவரும் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக் காவலாளியாகஇருந்தவருமான சின்னத்தம்பி ஆசைப்பிள்ளை என்பவரைக் கொலை செய்ததாக அவரது மனைவி செல்லம்மாமீது கிளிநொச்சிப் பொலிஸாரால் கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நேற்றைய விசாரணையில் படம் வரைபவரான திரு. டீ. யாமசிங்கா சாட்சியமளித்தார்.

விசாரணை முடிவில் செல்லம்மாவை விடுதலை செய்த மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பில் சம்பவத்தின்பின் நீதவான் ஸ்தலத்தில் விசாரணை நடாத்தியபோது 'சத்தம் போடாமல் வெட்டுவேன்' எனத் தாயார் கூறியதாகச் சாட்சி செல்வராசா கூறவில்லை என்றும் கொலை நடந்ததினம் இரவு சத்தம் கேட்டுத்தான் எழுந்து என்ன எனத் தாயாரிடம் கேட்டபோது தாயார் எதுவும் கூறவில்லையெனவும் வெட்டினுயா எனக் கேட்டபோது தாயார் வெட்டவில்லையெனக் கூறியதாகவுமே கூறியுள்ளார். சம்பவதினம் செல்வராசா கிராமசேவையாளரிடம் வாக்குமூலமளித்துள்ளார். ஆனுல் கோர்ட்டில் அதை மறுத்துள்ளார். 'சத்தம் போட்டால் உன்னையும் வெட்டுவேன்'' எனத் தாய் கூறியதாக முதன்முறையாகக் கோர்ட்டில்தான் செல்வராசா கூறினுர்.

இராசரத்தினம் என்பவர் செல்லம்மா குடும்பத்தில் சேர்ந்ததாலும் இதனுல் செல்லம்மா மீதுஏற்பட்ட சந்தேகத்தாலுமே செல்லம்மா சந்தேகிக்கப்பட்டுள்ளார்.

இன்ஸ்பெக்டரின் சாட்சியத்தில் ஆசைப்பிள்ளை இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் கழுத்து வெட்டுக்காயத்திலிருந்து ரத்தம் கொப்பளித்துப் பாய்ந்ததாகவும் கூறியுள்ளார். அத்துடன் ரத்தக்கறை படிந்த கத்தி ஒன்றும் அங்கு கிடக்கக் காணப்பட்டதாகக் கோர்ட்டில் சமர்ப்பித்தார், கிருந்தையில் கிடந்ததாகக் கூறப்பட்ட இக்கத்திமீது காணப்பட்ட ரத்தம் ஆசைப்பிள்ளையின் கழுத்திலிருந்து கொப்பளித்துப் பாயும்போது பட்டிருக்கலாம். சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லாததால் செல்லம்மாவை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். செல்லம்மா சார்பில் புரக்டர் கி. செல்லத்தம்பி ஆஜரானுர்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சத்துக்கு மேல் பணம் திரட்டி, முருகனுக்கு மலை உச்சியிலே அழகான கோவில் கட்டிவிட்ட கதை கேட்க ருசியானது.

ஜூன் 6ந்திகதி அங்கு கும்பாபிஷேகம். விசேஷமாகச் செய்யப்போகிறுர்களாம். பேராதனையில் முருகன் கோவில் கும்பாபிசேகத்துக்கு சென்னை, அண்ணுமலை மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கும் மாணவர்சங்க தலைவர்களுக்கும் அழைப்புஅனுப்பவேண்டும். ஏன் தெரியும் தானே!

தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுன்
உற்ருல்
தூயவராகி மேலைத்தொல்
கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும்
கொல்லோ அடுசமர்
புரிந்திட்டின்னுள்
மாயையின் மனுமன்ரூ
வரம்பிலா அருள்பெற
ருய்ந்தான்.

— ஸ்ரீ கச்சியப்பர்

# 'வெங்காய உற்பத்தியில் இந்தியாவை மிஞ்சிவிடும்'

## மாவட்ட விவசாய அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், புதன். வெங்காயப் பயிர்ச்செய்கையில் இந்தியாவில் ஒரு ஏக்கரில் இப்பொழுது 180 அந்தர் வெங்காயம் அறுவடை செய்யப்படுவதாகவும், இன்னும் சில ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டம் வெங்காய உற்பத்தியில் இந்தியாவையும் மிஞ்சிவிடுமென்றும் யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. என். ஜெயசிலன் தெரிவித்தார். இப்பொழுது யாழ். மாவட்டத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 100 அந்தர் வெங்காயம் அறுவடையாவதாக அவர்சொன்னுர் வெங்காயப்பயிர்த்தொழிலின் முன்னேற்றத்திற்கான முதற்படியாக விஞ்ஞான முறைப்படி மண்ணைப்பதப்படுத்திபசளையிடும் முறையைப்பற்றி விவசாயிகளுக்கு பிரச்சாரம் செய்யப்பட்டுவருவதாகவும், யாழ். மாவட்டத்தில் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி தென்மராட்சி ஆகிய இடங்களில் சுமார் 22 பிரசாரக் கூட்டங்கள் நடந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் தொடக்கம் யாழ். மாவட்டத்தில் வெங்காயம் பயிரிடும் 54 நிலங்களில் வெங்காயச் செய்கை முறைப் பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்க யாழ்ப்பாண விவசாய இலாகா [illegible] நடவடிக்கை எடுத்துவருகிறதாம். [வி. நி]

## சேலைகளைத் திருப்பிக் கொடுத்தனர்?

யாழ்ப்பாணம், புதன் லொறியொன்றில் கருவாடுகளுக்குள் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டதாகக் கருதப்பட்டு ஆனையிறவுப் பொலிஸ் தடைமுகாமில் கைப்பற்றப்பட்ட விலையுயர்ந்த சேலைகள் உரியவர்களிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## வடபகுதி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவின் போது சுமார் 250 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் சமுகமளித்திருந்தனர்.

தமிழ் பௌத்த சங்கத் தலைவர் திரு. வைரமுத்துவும், யாழ்ப்பாணம் நாகவிகாரை கடவத்துவ நந்தராமதேரோவும், பிள்ளைகளை தெரிவு செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்,

சிங்களத்தில் பயிலுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட 100 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகளுக்கும், காலி வித்தியோதய பிரிவேனுவிலும், மத்தேகம ரத்னசாலா பிரிவேனுவிலும் கல்வி போதிக்கப்படும்.

சிறுபான்மைத் தமிழ்ப் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளைச், சிங்கள மொழியில், கல்வியூட்டுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்களென்றும் தெரிய வருகிறது.

சிங்களத்தில் கல்விபெற தெரிவு செய்யப்பட்ட 100 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள், வட பகுதியில் பல்வேறு இடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு:- சங்கானை—20, அச்சுவேலி—20, புத்தூர்—15, அல்வாய்—10, கரவெட்டி—10, பூநகரி—10, காரைநகர்—3, வட்டுக்கோட்டை—2, சாவகச்சேரி—3, கொடிகாமம்—2, காங்கேசன்துறை—5.

அடுத்த மாத இறுதியில் மற்றொரு தெரிவு நடைபெறுமென்றும், அத் தெரிவில், 200 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் தெரிய வருகிறது.

[நல். நி]

## கதைத்தொகுதி அறிமுக விழா

யாழ்ப்பாணம், புதன் 'யுகம்' என்ற சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா நாளை மாலை யாழ்ப்பாண மாநகர சபை ஊழியர் பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. யாழ். இலக்கிய வட்டத்தினர் நடத்தும் இவ்வைபவத்திற்கு இலக்கியவட்டத் தலைவர் கவிஞர் கந்தவனம் தலைமை தாங்குவார்.

கவிஞர் இ. நாகராஜன் வரவேற்புரையும், 'யாழ்வாணன்' அறிமுக உரையும் நிகழ்த்துவர். இரசிகமணி கனக. செந்திநாதன், செம்பியன் செல்வன், திரு. க. பரராஜசிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார். தொகுப்பாசிரியர் 'இமையவன்' மற்றும் 'செங்கை ஆழியான்' ஆகியோரும் உரைநிகழ்த்துவர்.

# 'எனக்குச் செய்த துரோகம்போல் புதிய காதலனுக்கும் செய்யாதே'

## மனைவிக்கு கணவன் ஆசிர்வாதம்

வவுனியா, செவ். "பத்தும் பெற்று மகாராணியாக வாழு. நீ எனக்குச் செய்த துரோகம்போல் தற்போதைய உனது காதலனுக்கும் செய்துவிடாதே! புதிய காதலனுடன் இன்பமாக வாழு. எனது பிள்ளையை மட்டும் என்னிடம் கொடுத்துவிடு."

ஐந்துவயதுக் குழந்தைக்குத்தாயான தனது இளம் மனைவியை அவளின் புதிய காதலனுடன் சேர்த்து வைத்து புதுவாழ்வு வாழ வழியனுப்பி வைத்தபோது அவளது கணவன் மேற்கண்டவாறு ஆசி கூறினுர்.

தன்னை வெறுத்து புதியகாதலனுடன் வாழ்வு நடாத்த விரும்பிய தாலி கட்டிய தனது மனைவியை வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து வழியனுப்பி வைத்தார்.

முல்லைத்தீவில் அரசாங்க ஊழியராக கடமையாற்றுபவரின் மனைவியான புவனேஸ்வரி [23] உழவு இயந்திர சாரதியான தனது புதிய காதலருடன் வாழ்வு நடாத்தப்போவதாக தனது கணவனிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து தனது மனைவியையும், புதிய காதலனையும் சேர்த்து வைத்து அனுப்பினுர்.

## நீதிதிபக்கு உபசார விருந்து

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாண மாவட்ட வழக்கறிஞர்களால், இளைப்பாறவிருக்கும் நீதியரசர் கலாநிதி ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சிக்கு இன்றுயாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மண்டபத்தில் வழக்கறிஞர் திரு. பி.முத்துசாமிப்பிள்ளை தலைமையில் உபசாரவிருந்துநடைபெறும்

## நல்லபயன்

யாழ்ப்பாணம், புதன் மிளகாய் செடிகளில் வரவும் குருமண் நோயை தடுப்பதற்கு உபயோகிக்கப்படும் மெற்றசிஸ் டொக்ஸ் என்ற மருந்தே நல்ல பயனை அளி[illegible] விவசாயிகள் பலர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அ[illegible]ட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org